# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 10 அக்டோபர் 2025 தனிபிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 11 Issue No : 10 October 2025 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-



## என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்...

அவர் இரட்சிப்பின் நிமித்தம்... துதிப்பேன்...

சங்கீதம் 42:5

## அனைத்தையும் இழந்தோம், இரட்டிப்பாக பெற்றுக்கொண்டோம்



நாங்கள் இயேசு கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்தவர்கள். கடன் பிரச்சனையினால் தத்தளித்தோம். பல வியாதிகள் மற்றும் சாபம் எங்களை சூழ்ந்துக்கொண்டது. ஒன்றுமேயில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டோம். சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை நேரில் சந்தித்தோம். ஐயா எங்களுக்காக ஜெபித்தார்கள். என் இளைய மகனைப்பார்த்து நீ பெரிய ஜாதியாவாய் என சொன்னார்கள். ஐயா சொன்ன தீர்க்கதரிசனத்தின் படியே மகன் தற்பொழுது வருடத்திற்கு 24 லட்சம் ரூபாய் சம்பாதிக்கும் அளவிற்கு கர்த்தர் மகனை உயர்த்தியுள்ளார். சென்னையில் சொந்த வீடு வாங்கவும் கர்த்தர் உதவி செய்தார். எங்களுடைய மூன்று பிள்ளைகளும் நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

நான்கு வருடங்களுக்கு முன்பு என் மச்சினன் செய்துவந்த பிசினஸில் ஒரு சில பிரச்சனைகள் வந்தது. அதனால் கடையை மூடும் நிலை ஏற்பட்டது. திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு அதற்காக ஜெபிக்கும்படி ஐயாவிடம் சொன்னோம். நாங்களும் பொருத்தனையோடு ஜெபித்து வந்தோம். கடையை மூடாதபடி கர்த்தர் பாதுகாத்தார். தேவனுக்கே மகிமை!

**-சகோ. சுயம்புலிங்கம், மாவடி.**

## காணாமற் போன ஆட்டை தேடி மீட்டுக் கொண்டு வந்த இயேசு!...



நானும் என் மனைவியும் மிகவும் பாரம்பரிய நம்பிக்கை உடையவர்களாக இருந்தோம். கிறிஸ்து இயேசுவை பற்றி சற்றும் அறியாதவர்களாக இருந்தோம். என்னுடைய மாமியார் மனநிலை பாதிக்கப்பட்டு திடீரென ஒரு நாள் வீட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். பல இடங்களில் தேடியும் அவர்கள் கிடைக்கவில்லை. Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை பற்றி அறிந்து, சகோதரனுடைய கூட்டத்திற்கு நானும் என் மனைவியும் வந்து கலந்துக்கொண்டோம். தனிஜெபத்தில் மாமியாரைக்குறித்து கூறினோம். அப்பொழுது சகோதரன் எங்களைப் பாத்து, நீங்கள் ஒன்றுக்கும் கலங்க வேண்டாம், இந்த வாரமே வீட்டிற்கு அவர்கள் திரும்பி வந்து விடுவார்கள்! இயேசு அற்புதம் செய்வார் என்று கூறினார்கள். எங்களால் இதை நம்ப முடியவில்லை. முடிவில் சகோதரர் ஜெபித்து, தீர்க்கதரிசனமாக கூறினது போலவே, ஐந்து நாட்களுக்குள் மாமியார் வீடு வந்து சேர்ந்தார்கள். இயேசு கிறிஸ்து அவர்களுடைய மனநிலை பாதிப்பையும் குணப்படுத்தி இருந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**-திரு.ரமேஷ், திண்டுக்கல்.**

# அன்பரின் ஊழியம்

மலர் 11 அக்டோபர் 2025 இதழ் 10

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



**Dr. ஜேன் ஜாஷ்வா**

நம் ஆண்டவரும் உலகின் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். நாட்கள் செல்லச் செல்ல நம் உலகமே தலைகீழாக மாறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் அன்பையும், இயேசு கிறிஸ்துவின் பெயரையும் தைரியமாக பிரசங்கிக்கிற மக்களுக்கு எங்கும் பாதுகாப்பு இல்லை என்பது உறுதியாகி கொண்டிருக்கிறது. ஏனென்றால் சாத்தான் தமக்கு கொஞ்ச காலமே இருக்கிறது என்பதை அறிந்திருப்பதால் வெளியரங்கமாகவும், பகிரங்கமாகவும் தன் செயல்களை நடப்பித்துக்கொண்டிருக்கிறான். இப்படியிருக்க, நம் தலைமுறையிலுள்ள பிள்ளைகள் கர்த்தருக்குள் நிலைத்திருப்பது என்பது ஒரு பெரிய சவால். ஒரு பக்கம் வியாதிகள், இன்னொரு பக்கம் பலவிதமான போராட்டங்கள், பண கஷ்டங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கிறது. இத்தகைய உலகப் பிரகாரமான காரியங்களையும், சத்துருவின் போராட்டங்களையும் மேற் கொள்வது கடினமான காரியமாக இருக்கிறது. இதற்கென்ன விடை? **நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம், எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார், எஸ்றா 8 : 21 - 23**-ன்படி உபவாசித்து கர்த்தருடைய இரக்கத்திற்காக நாம் கெஞ்சுவோம். சோர்ந்து போகாமல் கர்த்தரிடம் கேளுங்கள். உங்களை ஜெபிக்கவிடாமல் தடுப்பதே சத்துருவின் போராட்டம் தான். அதனால் ஊக்கமாய் ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்கு பெரிய அற்புதங்களை செய்வார்.

எங்கள் அப்பா, அம்மாவின் நல்ல சுகத்திற்காக ஜெபியுங்கள். தொடர்ந்து ஊழியத்திற்காகவும் விசேஷமாக ஜெபியுங்கள். உங்கள் ஜெபம் மிகுந்த அவசியமாக இருக்கிறது. ஊழியத்திற்காக குறிப்பிட்ட நேரத்தில் ஜெபிக்க விரும்புகிற பங்காளர்கள் எங்களை தொடர்புக்கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**ஊழியத்தில் எங்களோடு இணைந்து வேலை செய்ய ஊழியர்கள் தேவை. அதற்காகவும் ஜெபியுங்கள். ஊழியத்தில் வேலை செய்ய வருகிறவர்களுக்கு ஏற்ற ஊதியம் தரப்படும். தங்கும் வசதியும் நம்மிடம் உண்டு.**

நமது Ministry of Jesus You Tube சேனலில் வெளிவருகிற அனுதின அற்புதம், புதிய நிகழ்ச்சிகள் மற்றும் நேரலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து பாருங்கள். நம்பிக்கை டி.வி. வாயிலாக வருகிற அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளையும் தவறாமல் பாருங்கள். கூட்டங்களுக்கு வாருங்கள்.

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

அக்டோபர் மாதம் நாகர்கோவில், மதுரை, சென்னை, வேலூர் மற்றும் திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்காக ஜெபியுங்கள். கூட்டங்களை நடத்துவதற்குரிய தேவைகள் ஏராளமாக இருக்கிறது. உங்கள் மனவிருப்பத்தின்படியே உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில் | Dr. ஜேன் ஜாஷ்வா | jane@mojindia.org

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

புத்தம் புதிய நிகழ்ச்சி



# அனுதின அற்புதம்

DAILY MIRACLE

தினமும் காலை 5 மணி

MINISTRY OF JESUS

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக் காணலாம்.


ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 6:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org
Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003




கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே!

அன்பர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், வயோதிப தாய் தந்தையரையும், வாலிப பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் மிகவும் ஆசீர்வதிப்பாராக! படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு மகத்தான வெற்றியும், விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலும், தொழில் மற்றும் வியாபாரம் செய்கிறவர்களுக்கு மகத்தான விருத்தியடைதலையும், அரசாங்க வேலையில் இருப்பவர்களுக்கு உயர்வையும் நம் உன்னதமான தேவன் இந்த மாதத்தில் கட்டளையிடுவாராக!

உங்களில் அநேகர் அன்பரின் ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபித்து வருவதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இப்போதும் ஆவியானவர் என் மூலமாக கொடுக்கும் அருமையான தேவ வார்த்தைகளை கவனமாய் படியுங்கள்.

*என் ஆத்துமாவே,*
*நீ ஏன் கலங்குகிறாய்?*
*ஏன் எனக்குள் தியங்குகிறாய்?*
*தேவனை நோக்கி காத்திரு,*
*அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம்*
*நான் இன்னும் அவரைத் துதிப்பேன்!*
*சங்கீதம் 42:5,11 (சங்.43:5)*

இந்த வசனம் எவ்வளவு ஆழமான அர்த்தங்களை உடையதாய் இருக்கிறது. தாவீது என்னும் இளைஞன் மனிதருக்கு முன்பாகவும், தன் சகோதரருக்கு முன்பாகவும் எண்ணமற்றவனாய் காணப்பட்டான். ஆனால் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலினாலும்,

மகத்தான தேவகிருபையினாலும் தாவீது உன்னதமான, பேர் புகழ் பெற்ற ராஜாவாக மாறினான். கர்த்தர் தாமே பூமியிலுள்ள பெரியோர்களுக்கு ஒத்த நாமத்தை அவனுக்கு கொடுத்து அவனை ஆசீர்வதித்து உயர்த்தினார். நூற்றுக்கணக்கான துதி பாடல்களை நன்றியோடு கர்த்தருக்கு மகிமையாக பாடி தேவனை துதிக்கின்றான். தாவீதை குறித்து கர்த்தர் பல இடங்களில் என் தாசனாகிய தாவீது என்று கூறுகிறார். இது தேவனிடமிருந்து வருகிற எவ்வளவு பெரிய அறிக்கை என்பதை நாம் உணர வேண்டும். எனினும், அந்நாட்களில் பல இக்கட்டுகளையும், சோதனைகளையும் எண்ணிலடங்காத சத்துருக்களையும், மூர்க்கங்களையும் தன்னோடு தன்னில் ஒருவராக பழகின சிநேகிதரின் துரோகங்களையும், பாவத்தின் தண்டனைகளையும் அவன் அனுபவிக்க வேண்டியதாயிருந்தது. இதனிமித்தம் அவன் ஆத்துமா சோர்ந்து போகிறது. மேலே உள்ள வார்த்தைகள் **சங்கீதம் 42:5, 43:5ல்** நாம் பார்க்கிறோம். தாவீதின் ஆத்துமா ஏன் கலங்குகிறது? அவன் ஏன் தனக்குள் தியங்குகிறான்? அதின் முடிவு என்ன என்பதை குறித்து நாம் இச்செய்தியில் சுருக்கமாக பார்ப்போம்.

# தாவீதின் கலக்கம்

தாவீது தம் இளம் வயதிலேயே மிகப்பெரிய வெற்றிகளை குவித்து வந்தான். சவுல் ராஜா தாவீதை உற்சாகப்படுத்தி, அவனை இன்னும் அதிகமாக உயர்த்துவதற்கு பதிலாக நாட்டை விட்டே துரத்த முற்படுகிறான். ஒரு வாலிபனை கொலை செய்வதற்கு மூவாயிரம் பேரோடு போகிறான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிக முக்கியமான எருசலேமில் கொடுக்கப்பட்ட பரிசுத்த தேவாலயத்திற்கு அவன் போக முடியாமல் தத்தளிக்கிறான். அந்த இடத்திற்கு போகவேண்டுமென்றால் அவனை கொலை செய்யும் நோக்கத்தோடு காத்திருக்கிற சதிகாரர்களை கடந்து தான் செல்ல வேண்டும். இந்நிலையில் தாவீது தனக்குள் ஏங்கினான். நான் ஏன் தேவனுடைய சந்நிதியை விட்டு துரத்தப்பட வேண்டும்? தேவாலயத்தின் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடு கூட நான் நடந்து கூட்டத்தின் களிப்பும், துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே, இப்போதும் முற்றிலுமாய் கர்த்தருடைய சமூகத்தை விட்டு தன்னை விரட்டி விட்டார்களே என்று அழுதான், கலங்கினான்.

*தாவீது தேவனுடைய*
*ஆலயத்தில் இருப்பதையும்,*
*அவர் பிரசன்னத்தில் இருந்து*
*அவரை தரிசிப்பதிலும்*
*அதிக வாஞ்சையாய் இருக்கின்றான்.*
*(சங்கீதம் 84:1,2,10, 27:4, 63:2, 132:1,5)*

ஆம், அன்பானவர்களே! பரிசுத்த தேவன் எப்போதும் தான் உண்டாக்கிய மகத்தான சிருஷ்டிப்பாகிய நம்மிடத்தில் வாசம் பண்ண விரும்புகிறார். **(வெளிப்படுத்தல் 21:3; சகரியா 2:10; எரேமியா 32:38)** ஆனால் இந்த உலகில் நாம் வாழும் நாட்களில்



தேவனுடைய பரிசுத்தமான சந்நிதியில் நாம் காணப்படாதபடி சத்துருவாகிய சாத்தான் பலவிதமான சோதனைகளைக் கொண்டு வந்து நம்மை துக்கப்படுத்துகிறான். **(1 பேதுரு 1:6, யாக்கோபு 1:2, 1 பேதுரு 5:8)** நாம் எவ்வளவு கர்த்தருக்கு பிரியமாய் வாழ வேண்டும் என்று நினைக்கிறோமோ அத்தனைக்கு அதிகமாக சத்துருவாகிய சாத்தான் நம் குடும்பத்தினர் மூலமும், நம் உடன் பிறந்தவர்கள் மூலமும், நம் நண்பர்கள் மூலமும் உலகத்தின் புகழ், பணம், பெருமை மற்றும் அதிகாரங்களால் பலவிதமான சோதனைகளுக்கு நம்மை உட்படுத்தி, தீராத துயரத்தையும் வேதனையையும் உருவாக்குகின்றான். தாவீது தன் சொந்த குடும்பத்தால் கைவிடப்பட்டிருந்தான். **(சங்கீதம் 27:10)** உடன் பிறந்த சகோதரர்களால் ஏளனமாக எண்ணப்பட்டான். **(1 சாமுவேல் 17:28)** அவனுடைய அரசவையில் முக்கியமான இடத்திலிருந்த அகித்தோப்பேல் தாவீதை கொலை செய்ய தேடினான். **(சங்கீதம் 41:9)** ஏனென்றால் சரித்திர ஆதாரங்களின்படி தன் பேத்தியாகிய பத்சேபாளை கெடுத்து, அவள் கணவரை கொன்றதின் நிமித்தம் அகித்தோப்பேல் தாவீதை பழி வாங்க நினைத்தான். அதற்கு ஏற்ற காலம் வந்தது. தாவீது தன் மகனால் விரட்டப்பட்டபொழுது அவனால் பின் வைத்து போன மறுமனையாட்டியினிடத்தில் அப்சலோம் விபச்சாரம் செய்யும்படி அகித்தோப்பேல் தூண்டினான். எவ்வளவு கொடுமை பாருங்கள். **(2சாமுவேல் 16:20-23 17:1-4)** பயங்கரமான இராட்சஷன் கோலியாத்தை இளைஞன் தாவீது எதிர்கொண்டு வெற்றி பெற்றதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல் தாவீதை கௌரவப்படுத்துவதற்கு பதிலாக அவன் மீது பொறாமை கொண்டு மலைகளில் உள்ள ஒரு கௌதாரி, தெள்ளுப்பூச்சியை போல வேட்டையாடுகிறான். அவன் பிராணனை அழிக்க வகை தேடினான். **(1 சாமுவேல் 20:20)** தேனீக்களைப் போல சகல ஜாதியாரும் அவனை கொலை செய்ய சுற்றிலும் வளைந்துக் கொண்டார்கள். **(சங்கீதம் 118:10,12)** காரணமில்லாமல் அவனை பகைக்கிறவர்கள் தலைமயிரிலும் அதிகமாக இருந்தார்கள். தாவீதின் ஆவி முறிந்து போனது. முறிந்த ஆவியை யாரால் தாங்க முடியும். **(நீதி. 18:14)** எனினும், தாவீது தன்னை அநியாயமாய் சூழ்ந்துகொண்ட பகைஞரை கவனிக்காமல் தேவ சமூகத்தில் நின்றான். உன்னதமான தேவனுடைய இரட்சிப்பிற்காக அவன் ஆத்துமா தவித்தது. அவருடைய வசனத்திற்கு காத்திருந்தது. எப்பொழுது கர்த்தர் அவனை தேற்றுவார் என்று அவர் வாக்குத்தத்தங்கள் மேல் நோக்கமாய் அவன் கண்கள் பூத்துப்போயிற்று. புகையில் உள்ள துருத்தியைப் போலானேன். ஆனாலும் தாவீது கர்த்தருடைய பிரமாணங்களை பற்றிபிடித்தபடியால் கர்த்தர் அவனை எல்லா சத்துருக்களிடமிருந்தும் விடுதலையாக்கி தம்முடைய காருணியத்தினால் பெரியோருக்கு ஒத்த நாமத்தையும், அவனுக்கு மகத்தான இரட்சிப்பையும் அருளினார்.

தாவீதிற்கும் பலவிதமான சோதனைகள் ஏற்பட்டது. அவன் ராஜாவான பிறகு, இன்னொருவனுடைய மனைவியை அபகரித்து அவள் கணவரை கொலை செய்து, பெருமையால் ஜனத்தொகையை எண்ணினான். இதன் நிமித்தம் அவன் ஆத்துமா மிகவும் கலங்கினது! தனது தவறை உணர்ந்து, தன்னை உயர்த்திய சர்வ வல்ல தேவனை எவ்வளவாய் துக்கப்படுத்திவிட்டேன் என்று அழுது மன்னிப்பு கேட்டான் **(சங். 51)** மிகுந்த இரக்கமுள்ள தேவன் அவன் மீது இரங்கி அவன் பாவத்தையெல்லாம் மன்னித்து மீண்டும் அவனை உயர்த்தினார். இவ்வாறு தாவீதின் வாழ்வில் மட்டும் கலக்கம் இல்லை. நம்முடைய வாழ்விலும் பல கலக்கங்கள் வந்து போகிறது.

உதாரணமாக ஊழியத்தில் நான் சந்தித்த ஒரு அனுபவத்தை இங்கு எழுதுகிறேன். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு பிற மாநிலத்தில் உள்ள பெரும் பணக்காரரான ஒருவர் அவருடைய வீட்டிற்கு வரவேண்டும் என எனக்கு அழைப்பு கொடுத்திருந்தார். நானும், என் உடனிருந்த வர்களும் சென்றிருந்தோம் அந்த வீட்டை சுற்றிலும் எங்கும் தேவனுடைய வார்த்தைகள் இருந்தது. அத்துடன் 24 மணி நேரமும் துதி பாடல்கள் பாடிக்கொண்டிருந்தது. என்னோடு இருந்தவர்கள் உணவருந்திவிட்டு, நீண்ட பயணத்தின் நிமித்தம் உடனடியாக தூங்கி விட்டார்கள். நானும் மிகவும் களைத்து தூங்க ஆரம்பித்தேன். திடிரென்று ஒரு வாலிப சகோதரனுடைய ஆவி என் அருகில் வந்து நின்று, என்னை பார்த்து "நீங்கள் ஒரு புகழ் பெற்ற தீர்க்கதரிசி அல்லவா? இந்த வீட்டில் உள்ளவர்களை பற்றி உங்களுக்குத் தெரியாதா? என முறையிட்டு, நடந்த சம்பவத்தை கூறியது. "இந்த குடும்பத்தில் உள்ள பெரியவருக்கு ஏராளமான கம்பெனிகள் இருந்தன. அந்த பெரியவர், என்னை அழைத்து 100 கோடி ரூபாய் பணத்தை உன்னுடைய வங்கியில் நான் டெபாசிட் செய்கிறேன். அரசாங்க அதிகாரிகள் வந்து பரிசோதனை முடித்து சென்ற பின்பு, அந்தப் பணத்தை வாங்கிக் கொள்கிறேன்" என்றும் அதற்காக உனக்கு 10 கோடி ரூபாய் பணத்தை நான் தருகிறேன் எனவும் கூறினார். நானோ ஒரு ஏழை. என்னுடைய வங்கியில் திடிரென்று 100 கோடி வந்தால் வங்கி அதிகாரிகளும், வருமான வரி அதிகாரிகளும் கேள்வி கேட்க மாட்டார்களா? என்று கூறினேன். அப்பொழுது அந்த முதலாளிக்கு என் மீது கோபம் வந்தது. நான் சொல்வதை செய் இல்லையென்றால் உன்னை கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார். நான் பயந்து போனேன். என் ஆத்துமா எனக்குள் கலங்கினது, தியங்கினது. மனசாட்சிக்கு விரோதமாகவும், அரசாங்கத்திற்கு விரோதமாகவும் இவ்வளவு பெரிய தவறு செய்ய நான் சம்மதிக்கவில்லை. உடனே இளம் வயதான என்னை அடியாட்கள் வைத்து கொடுமையாய் அடித்து என்னை கொன்றுவிட்டார்கள். எனக்கு கடவுள் ஏன் உதவி செய்யவில்லை? நீங்கள் ஒரு பெரிய தீர்க்கதரிசி தானே இவர்களை குறித்து உங்களுக்கு தெரியாதா? ஏன் இந்த வீட்டில் தங்குகிறீர்கள், இங்கு தங்காதிருங்கள் இது ஒரு கொலைகார வீடு என்று புலம்பியது. இன்னும் இரண்டு பேரை இங்கு கொடூரமாய் கொலை செய்திருக்கிறார்கள். அந்த ஆவிகளும் இந்த நபரை பழிவாங்கும்படி என்னுடன் சேர்ந்து, இங்கே தான் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று கூறியது. அதைக்கேட்டு நான் மிகவும் வருத்தப்பட்டேன். இவ்வாறு பண பலத்தால் உலகமெங்கும் ஏராளமான அநீதிகள் நடந்துக்கொண்டிருக்கிறது. அந்த வாலிபனுடைய மனம் எவ்வளவாக கலங்கி இருக்கும் என்று பாருங்கள்.

இன்னொரு சமயம் ஒரு இரவில் ஒரு வாலிப பிள்ளை என்னையும், என் மனைவியையும் தேடி வந்தாள். அவள் முகம் கண்ணீரால் நிறைந்திருந்தது. அவள் முகத்தில் காயம் இருந்தது. அவள் மிகவும் களைத்திருந்தாள். ஓடி வந்து

*"தேவனுடைய மனுஷனே எனக்கு அடைக்கலம் கொடுங்கள்"*

என்றாள். முதலாவது நாங்கள் தயங்கினோம். பிறகு அவளுக்கு சிற்றுண்டி வழங்கி, அவளை ஆறுதல்படுத்தி உட்கார வைத்தோம். அப்பொழுது அவள் "நான் என் வீட்டிற்கு ஒரே பிள்ளை. என் அப்பா குடிகாரர். என் பெற்றோர் விபச்சார தொழில் செய்து வருகிறார்கள். ஒரு நாள் வசதியான ஒரு நபர் எனது பெற்றோரை தேடி வந்தார். அப்பொழுது நான் தூங்கி கொண்டிருந்தேன். என்னை எழுப்பி

என் முகத்தை கழுவி, அலங்காரம் செய்து தேவன் எனக்குக் கொடுத்த அழகையும், சரீரத்தையும் அந்த நபருக்கு விலை மாதாக கையளிக்க வற்புறுத்தினார்கள், என் அழகை பயன்படுத்தி, பாவத்தை செய்ய வைத்து லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க எண்ணினர். நானோ தேவனுக்கு பயந்தவள். அவர்கள் விருப்பத்தின்படி வாழ முடியாது என மறுத்ததினால், உனக்கு எதற்கு இந்த அழகு என்று சொல்லி என் முகத்தை கத்தியால் கீரினார்கள். அதனால் தான் இந்த காயம். அன்று இரவு 9.30 மணிக்கு என்னை தர தரவென்று இழுத்துக் கொண்டுப்போய் அந்த பணக்காரனிடத்தில் ஒப்படைத்து விட்டனர். அங்கிருந்த பாத்ரூமிற்குள் சென்று முழங்கால்படியிட்டு தேவனை நோக்கி கதறினேன்.

*"கர்த்தாவே நீர் எனக்கு தந்த உடலை*
*ஒரு துன்மார்க்கனுக்கு விலையாக*
*கொடுக்க வேண்டுமா? என்று அழுதேன்.*
*தேவனிடமிருந்து என்ன*
*பதில் கிடைக்கும் என்று காத்திருந்தேன்.*
*அப்பொழுது தான் அவர் உங்களுடைய பெயர்,*
*விலாசத்தை எனக்கு கொடுத்து,*
*அங்கே சென்று ஒளிந்து கொள் என்றார்.*
*அதின்படி நான் இங்கு வந்திருக்கிறேன்"*

என்று கூறினாள். அவளது நிலையை கேட்டு நாங்களும் கண்ணீர் வடித்தோம். அன்று இரவு அவள் பாதுகாப்பாக நிம்மதியாக எங்கள் வீட்டில் தூங்கினாள். நாங்கள் இரவு முழுவதும் ஜெபித்தோம். தேவ சமூகத்திலிருந்து ஒரு ஆலோசனை வந்தது. அதன்படி அவளை ஒரு பெண்கள் விடுதியில் சேர்த்து, "என் மகளே! இந்த பெண்கள் விடுதியில் பத்து முதல் இருபது நாள் வரை தங்கியிரு. அதற்குரிய செலவுகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். சந்தோஷமாயிரு. என்று சொன்னோம். மேலும் அவளுடைய எதிர்காலத்தைக் குறித்து கர்த்தர் எங்களுக்கு சொன்னதை அவளிடம் தெரிவித்தோம். இந்திய இராணுவத்தில் கேப்டனாக பணி செய்துக்கொண்டிருக்கும் ஒருவர் உனக்கு ஏற்ற துணையாக வந்து, உன்னை முறைப்படி திருமணம் செய்துக்கொள்ளுவார். நீங்கள் நன்றாக இருப்பீர்கள், உங்களுக்கு குழந்தைகளும் பிறக்கும். பரிசுத்த வாழ்க்கை மேற்கொள்வாய்' என்று கூறியவுடன் அவள் ஆச்சரியப்பட்டாள். இது எப்படி சாத்தியமாகும் என கேட்டாள். நான் சொன்னேன் "இயேசுவை நம்பு அவரை விசுவாசிக்கும்பொழுது நம்மால் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை அவர் செய்வார்" (யோபு 5:9) என்றேன். அதேபோல 15-ம் நாளில் முன்பின் தெரியாத Navy Captain ஒருவர் அந்த விடுதிக்கு வந்து, அந்த மகளை சந்தித்து கூறினார். என்னுடைய சொப்பனத்தில் ஒரு தூதன் காட்சியளித்து, உன்னுடைய விவரத்தை, பெயரை சொல்லி, உன்னை மனைவியாக ஏற்றுக்கொள் என்று சொன்னார். உன்னைப் பாதுகாத்து வந்த தீர்க்கதரிசியையும் பார்த்தேன். நீ கலங்காதே! உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி அந்த இராணுவ அதிகாரி அவளை அழைத்துக்கொண்டு போய், சென்னை Cathedral Church-ல் வைத்து கேப்டனின் பெற்றோர் அனுமதியுடன் திருமணம் செய்து, சந்தோஷமாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று குழந்தைகளுக்கு அவள் தாயாகி, தேவ பக்தியில் அவர்களை வளர்த்து வருகிறாள்.

ஆம், எனக்கன்பானவர்களே! நாம் வாழும் இந்த பூமியில் பலவித மான கொடுமைகளை மக்கள் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அத்தகைய பயங்கரமான நேரத்தில் தாவீதை போல தேவ சமூகத்தில் காத்திருங்கள். **(சங்கீதம் 6:1-4, 31 : 7, 9, 38 : 8-10 )** அப்படி காத்திருக்கும் வேளையில்

*இயேசுவின்*
*சிலுவைப் பாடுகளை நினைத்து,*
*அவர் நமக்குத் தரும் இரட்சிப்பினிமித்தமாய்*
*அவரை அதிகமாக துதியுங்கள்.*

வேத வசனத்தை நன்கு வாசியுங்கள். அபிஷேகத்தால் நிரப்பப்படுங்கள். உங்களை சோதித்த சாத்தான் இயேசுவின் நாமத்தில் உங்களைவிட்டு ஓடுவான். நீங்கள் வெற்றி வீரர்களாக மாறுவீர்கள். நிச்சயமாக இயேசுவின் இரத்தம் உங்களுடைய சகல பாவங்களையும் நீக்கி உங்களை சுத்திகரிக்கும். (1யோவான் 1:7,9) அவர் நமக்கு தந்த வேத வசனங்களும் (சங்.119:9,11), அபிஷேகமும் பாவமற்ற பரிசுத்த வான்களாக உங்களை மாற்றும். நிச்சயமாக பரலோகத்திலிருந்து உங்களுக்கு உதவி வரும்.

அன்பான வாசகர்களே! கொடுமையான வியாதி, கடன் பாரம் மற்றும் அருமையான வர்களுடைய இறப்பின் நிமித்தம் இப்பொழுது நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? திடீரென்று வேலை பறிபோனதால் என்ன செய்வது என திகைத்து நிற்கிறீர்களா? நன்கு படித்துக்கொண்டிருக்கின்ற பிள்ளைகளை தாக்குகின்ற மரண வியாதிகள், திடீரென்று ஏற்படுகின்ற வியாபார நஷ்டங்கள், விவசாயத்தை கெடுக்கின்ற கொள்ளை நோய்கள், பாசமாய் வளர்த்த பிள்ளைகளால் ஏற்படும் துரோகங்கள் உங்கள் ஆத்துமாவை மிகவும் நோகடிப்பதாய் இருக்கிறதா? கலங்காதீர் கள்.

*தாவீதைப்போல*
*கர்த்தர் சமூகத்தில் காத்திருங்கள்.*
*இரட்சிப்பை காண்பீர்கள்.*

இந்த பயங்கரமான கடைசி காலத்தில் நீங்கள் பிள்ளைகளை வளர்த்து நன்றாக படிக்க வைத்து, வெளி நாடுகளுக்கும் அனுப்பி மேற்படிப்பு படிக்க வைத்து அவர்கள் நல்ல உத்தியோகத்திற்கு வரும்வரைக்கும் நீங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து அவர்களை ஆதரித்திருப்பீர்கள். ஆனால் அந்த பிள்ளைகளோ, நல்ல வேலை கிடைத்தவுடன், நல்ல வாழ்க்கை அமைந்தவுடனே உங்களை நினைப்பதில்லை, உங்களை மதிப்பதில்லை என கலக்கத்துடன் இருக்கிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள். ஒரு துயரமான ஒரு செய்தியை நான் பத்திரிக்கையில் படித்தேன்.

ஒரு அருமையான தகப்பன், தன் மனைவி இறந்த பிறகு சுமார் 20 வருடமாக தன் ஒரே மகனை படிக்க வைத்து ஆளாக்கி சீரும் சிறப்புமாக கவனித்து வெளிநாட்டிற்கு அனுப்பி மேற்படிப்பும் படிக்க வைத்தார். முடிவில் அந்த மகன் அயல் நாட்டில் திருமணம் செய்து கொண்டு அங்கேயே தங்கிவிட்டான். அந்த தகப்பனாருக்கு வயதாகிவிட்டது, சரீரம் பெலவீனமடைந்தது, நெஞ்சு வலி அடிக்கடி வந்தது. பல முறை போன் செய்த பிறகு அவருடைய ஒரே மகனும், மருமகளும் அவரை பார்க்க வந்தனர். இவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். மகன் மருத்துவ மனைக்கு தன் அப்பாவை பார்க்க வந்தான். பார்க்க வரும் பொழுது கையில் கொடிய விஷம் கலந்த ஒரு மருந்தையும் கொண்டு வந்தான். அதை தான் வைத்திருந்த சிரிஞ்சியில் (syringe) உறிஞ்சி அப்பாவிற்கு போய்க் கொண்டிருந்த I.V.Fluid-ல் கலக்கும்படி முயற்சித்தப்பொழுது அவன் கம்பெனியிலிருந்து போன் வந்தபடியால் அவன் சற்று வெளியே போக வேண்டியதாயிற்று. அங்கிருந்த தெய்வ பக்தி உள்ள செவிலியர் இதை கவனித்து அந்த விஷம் நிறைந்த சிரிஞ்ஜை தனியாக வைத்துவிட்டு, அதே Solution உள்ள இன்னொரு சிரிஞ்ஜை வைத்தாள். மகன் வந்தான் அப்பாவிற்கு மருந்தை செலுத்தினான். நேரம் கடந்தது எனினும் அப்பா மரிக்கவில்லை. அவனுக்கு பெருத்த ஏமாற்றம் உண்டானது. முடிவில்

அப்பா பூரண குணமாகி, வீட்டிற்கும் வர ஆயத்தமானார். அப்பொழுது அந்த செவிலியர், மகன் கொண்டு வந்த விஷ மருந்தை தாம் மாற்றி விட்டதை அவரிடம் கூறினாள். இதற்கிடையில் அப்பாவின் பீரோவில் இருந்த வீட்டுப் பத்திரங்கள், நில பத்திரங்கள் மற்றும் வங்கி காசோலை எல்லாவற்றையும் மகன் திருடி வைத்துக் கொண்டு அவற்றில் கையெழுத்து போடுமாறு அப்பாவை வற்புறுத்தினான். அப்பாவின் மனம் தயங்கினது. தன் அறைக்குள் சென்று கண்ணீர்விட்டு தேவ சமூகத்தில் அழுதார். நான் தலைப்பில் சொன்னபடி தேவனுக்கு காத்திருந்தபொழுது தேவ சமூகத்திலிருந்து அவருக்கு ஒரு ஆலோசனை வந்தது. அதன்படி குடும்ப வழக்கறிஞர் உதவியுடன் உயிலை மாற்றி எழுதினார். அதில் "நீ பெற்ற தகப்பனையே கொலை செய்ய முயற்சித்த காரணத்தினால் உனக்கோ, உன் மனைவிக்கோ என் சொத்தில் எந்த பங்கும் இல்லை, சுதந்தரமில்லை" என்று எழுதிவிட்டார். காவல்துறை துணையோடு மகனையும், மருமகளையும் விரட்டிவிட்டார்.

ஆம் பிரியமான தேவ பிள்ளைகளே! நீங்கள் செய்த நன்மைக்கு பதிலாக உங்கள் பிள்ளைகளும், உறவினர்களும், நண்பர்களும் உங்களுக்கு விரோதமாக எது செய்தாலும் அது வாய்க்காதே போகும்.

*கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு*
*இரட்சிப்பு வரும்.*
*அவர் உங்களை இரட்சிப்பார்.*
*காரியங்களை உங்களுக்கு*
*அநுகூலமாக்குவார்,*
*தேற்றுவார். (சங்கீதம் 118:10-21)*

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து உங்களுக்கு உதவி செய்வார். ஏனென்றால் அவரும் நம்மை போல கலக்கத்திற்கு உள்ளானார்.

# உங்கள் கலக்கத்தை மாற்றும் இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவின் ஆத்துமா கலங்குவதை வேதத்தில் பார்க்கின்றோம். **(லூக்கா 19:41-44)** கர்த்தர் இயேசு உலகத்தில் இருந்தப்பொழுது யூதேயா, கலிலேயா, நாசரேத் மற்றும் சமாரியாவிலும், அதைச் சுற்றி இருக்கிற பட்டணங்களிலும் ஏராளமான அற்புதங்களை செய்தார். இயேசுவின் மனதுருக்கத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் விடுதலை பெற்றார்கள். மரித்தவர்கள் எழும்பினார்கள்! குருடர்கள் பார்வை பெற்றனர்! சப்பாணிகள் எழும்பி நடந்தார்கள். இயேசுகிறிஸ்து ஒவ்வொரு அற்புதங்களை செய்வதற்கும் முன்னால் இரவெல்லாம் தேவனோடு பேசிக்கொண்டிருப்பார். அவர் சமூகத்தை நித்தமும் தேடி, நாற்பது நாள் உபவாசம் இருந்தார். அதன் நிமித்தமாக தேவனுடைய வல்லமை **(லூக்கா 4:14)** அவர் மீது அதிகமாக இருந்தது. எனினும் யூதர்கள் எப்பொழுதும் இயேசுவை கொலை செய்ய வகை தேடினார்கள். **மத்தேயு 12:14, யோவான் 11:47-50) (மாற்கு 15:9, மத்தேயு 27:17)** இதனிமித்தம் அவர்கள் மேல் வரும் தேவ கோபாக்கினையை அவர்கள் அறியாமல் இருந்தார்கள். கர்த்தரோ தமக்கு ஏற்படப்போகிற கொடிய சிலுவை மரணத்தின் நிமித்தம் மிகவும் கலங்கினார். **(லூக்கா 22:41,42, எபிரெயர் 5:7)** எனினும் யூத ஜனங்கள், கர்த்தரை சிலுவையில் அறையப் ஒப்புக்கொடுப்பதாலும், அதனால் அவர்கள் அடையப்போகும் கொடுமையான உபத்திரவங்களை அறியாமலும் **(சுமார் 2 ஆயிரம் வருடம்)** சமாதானப்பிரபுவாகிய இயேசு அவர்கள் மத்தியில் வாழ்ந்தபடியால் அவர்களுக்கு சமாதானம் கிடைக்குமென்று

நம்பாதபடியாலும் கர்த்தர் இயேசு கலங்கினார். எருசலேம் நகரத்தை பார்த்து கண்ணீர் விட்டு அழுதார். **(லூக்கா 19:41)** ஆனாலும் அதை அவர்கள் உணராமல் போனார்கள்.

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தவர். (ஏசாயா 53:4) ஆகவே நம்முடைய கலக்கங்களை அவர் அறிந்திருக்கிறார். நம் வேதனைகளை அறிந்திருக்கிறார். தாவீதின் கலக்கத்தை மாற்றின கர்த்தர் நிச்சயம் உங்கள் கலக்கத்தை மாற்றி, நிறைவான மகிழ்ச்சியை, சமாதானத்தை தந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

எனக்கன்பானவர்களே! இந்த உலகத்தில் நம்மை சூழ்ந்திருக்கிற அநேகர் தேவனுடைய அன்பினை உணராமல் இருக்கிறார்கள். அறிந்தும் அவரை விசுவாசிக்காமல் இருக்கிறார்கள். இதனிமித்தம் உண்மையான தேவ பிள்ளைகள் அனுதினமும் தேவனை நோக்கி, இந்த தேசத்தை இரட்சிக்கமாட்டீரா என்று கண்ணீர் விட்டு அழுகிறார்கள். நிச்சயமாக நாம் கண்ணீர் விட்டு அழும் ஜெபம் சீக்கிரமாய் கேட்கப்படும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இரட்சிப்பு துரிதமாக வரும். ஏனென்றால், இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக வெகு சீக்கிரம் வரப்போகிறார். நம் கரங்களை வானத்திற்கு நேராக நீட்டி "இயேசுவே வாரும்! மாரநாதா!" என்று சொல்வோமாக. அதற்குள் ஏராளமான மக்கள் இயேசுவின் அன்பை உணர அவர் சமூகத்தில் அதிக நேரம் காத்திருந்து ஜெபித்து அவர் தரும் மகத்தான இரட்சிப்பை ஏற்றுக்கொள்வோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!





**English WhatsApp No: +91 94889 32937**

அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

"இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 9500487061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்"

மணியார்டர் (MO), காசோலை (Cheque), வரைவோலை (DD), Online Donation (Website) Bank Account, QR code, UPI, Google pay, Paytm, Phonepe.

முகவரி: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி 620018

## பங்காளர்களின் அன்பான கவனத்திற்கு...

உங்கள் குடும்பத்திற்கு அன்பரின் ஊழிய பத்திரிக்கை யார் பெயரில் வருகிறதோ அவர்களுடைய பிறந்த நாள், தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் பங்காளர் எண் ஆகியவற்றை எங்களுக்கு கடிதம் அல்லது வாட்ஸ் அப் மூலமாக தெரியப்படுத்துங்கள். அலுவலக கம்ப்யூட்டரில் பதிவு செய்வதற்கு அவசியம் தேவைப்படுகிறது.

Ministry of Jesus - Whats App Mobile: 9500487059

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
NAMBIKKAI
சனி, ஞாயிறு
8:30PM to 9:00PM

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
ARADHANA TV
வியாழன், வெள்ளி
7:00PM to 7:30PM

# நாசரேத்தில் நடைபெற்ற GAMA 25–வது வெள்ளி விழா ஆண்டு அபிஷேகப் பெருவிழாவின் கூட்ட அறிக்கை

கடந்த மாதம் Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் அவர்கள் மகள் Dr.ஜேன் ஜாஷ்வா அவர்களும் GAMA வெள்ளிவிழா ஆண்டு அபிஷேகப் பெருவிழாவில் கலந்துகொண்டு தேவசெய்தியளித்து ஜெபித்து வந்தார்கள். இக்கூட்டங்களின் மூலம் அநேகர் ஆண்டவரை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். சமாதானமில்லாமல் வாழ்ந்துக்கொண்டிருந்த தம்பதியர் வாழ்க்கையில் ஆண்டவர் இடைபட்டு,அவர்கள் மகிழ்ச்சியாக வாழ கிருபை செய்துள்ளார்.

சத்துருவின் போராட்டம் மற்றும் இரவில் தூக்கம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பலர், பில்லிசூன்யம், மாந்திரீக கட்டுகளினால் சிறைப்பட்டு இருந்த குடும்பங்களுக்கு கர்த்தர் தாமே விடுதலையை தந்தார்.

அவர்கள் இருவரும் வழங்கிய தேவசெய்தியும், பாரமான ஜெபமும் அநேகருடைய வாழ்வில் மாற்றத்தையும், ஆண்டவருக்கு பயப்படும் பயத்தையும் கொடுத்துள்ளது. மூன்று நாட்கள் கூட்டங்களில் தெய்வீக பிரசன்னம் நிறைவாக காணப்பட்டது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!








Rev. Samuel
GAMA Ministry Founder





**உலகமெங்கும் அநியாயமாக துன்பப்படுத்தப்பட்டு, பலவித இன்னல்களையும்,பாடுகளையும் அனுபவித்து சிறையில் அடைக்கப்பட்டு, கொடூரமாய் கொலை செய்யப்படுகின்ற நம்முடைய சகோதர, சகோதரிகளுக்காகவும், தேவனுடைய பிள்ளைகளுக்காகவும் நாம் ஊக்கமாக ஜெபிப்போம்!**

அன்பான வாசர்களே! நாம் அனைவரும் அறிந்தபடி இந்த உலகம் துன்மார்க்கராலும், கடவுளே இல்லையென்று என்னும் கொள்கை உடையவர்களாலும், சோதோமின் பாவங்களாலும், நோவா காலத்து பாவங்களாலும் சீரழிந்து கொண்டிருக்கிறது. அநேகர் சாத்தானையும், அந்திகிறிஸ்துவையும் வணங்கி, தாங்கள் பின்பற்றும் கொள்கையில் பிடிவாதமாக இருந்து, அந்த கொள்கையை பின்பற்றாதவர்களை கொடூரமாக கொலை செய்வதையும் பார்க்கிறோம். இப்படி கொலை செய்யப்பட்ட இரத்த சாட்சிகளின் கூக்குரல் பரலோகத்தில் இருக்கிற தேவனுடைய பலிபீடத்தில் சத்தமிட்டு கதறுவதை வேதத்தில் நாம் வாசிக்கிறோம். (வெளி. 6:9) இதன் நிமித்தமாகவே ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் இயேசுவின் வருகை மகா சீக்கிரமாக வருமென்றும், இந்த உலகம் தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாவதையும் நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஆகவே நம்மைவிட அதிக பாடுபடுகிற அனைத்து தேவ பிள்ளைகளுக்காக ஊக்கமாய் ஜெபிப்போம்.

தேவாலயங்கள், ஜெபக்கூடாரங்கள் இடிக்கப்படுகின்றது. சாலையில் செல்கின்ற தேவ பிள்ளைகளை கொலை செய்கிறார்கள். இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். இயேசுவை விசுவாசிக்கிற உண்மை கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மற்றவர்களுக்கு அநியாயம் செய்யமாட்டார்கள். கர்த்தரே தஞ்சம் என்று வாழ்வார்கள். தங்களை துன்பப்படுத்துகிற சத்துருக்களுக்காக பிதாவை நோக்கி அவர்களை மன்னிக்கும்படி தான் ஜெபிப்பார்கள். ஆகவே துன்புறுகிறவர்களின் மன தைரியத்திற்காகவும், கர்த்தருடைய நித்தியமான பிரசன்னம் உபத்திரவங்கள் மத்தியில் அவர்களை ஆறுதல்படுத்தவும் ஜெபிப்போம்

கிறிஸ்துவுக்காக துன்புறுகிற சகோதர சகோதரிகள் வாழ்வில் தேவ சமாதானம், தேவ பிரசன்னம் உடனிருந்து அவர்களை வழிநடத்த, கடைசி வரை விசுவாசத்தை விட்டு விலகாமல் உறுதியாய் நிற்க ஜெபிப்போம். துன்புறுகிற சகோதர, சகோதரிகளின் பிள்ளைகளுக்காகவும் ஜெபிப்போம். பிள்ளைகளுக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள், என்னோடு இணைந்து தோளோடு தோள் கொடுக்க விரும்புகிறவர்கள் என்னை தயவாய் தொடர்புகொள்ளுங்கள். இவர்களுக்காக ஜெபித்து உதவுகிற தேவ பிள்ளைகளை கர்த்தர் மிகவும் ஆசீர்வதிப்பார்.

கிறிஸ்தவர்களை அதிகமாக துன்பப்படுத்தி கொலை செய்கிறவர்கள் எல்லாம் கிறிஸ்து இயேசுவினுடைய அன்பின் சிலுவை காட்சியை கண்டு மனந்திரும்பவும், மோட்சம், பாதாளம், நரகத்தை தரிசனமாய் பார்த்து, இயேசுவின் அன்பை உணரவும், நல்லவைகளை செய்யவும் அதிக ஊக்கமாய் ஜெபிப்போம். கிறிஸ்தவர்களை துன்புறுத்தி, குடும்பமாய் சிறையில் அடைத்து கொலை செய்த சவுலை இயேசுவின் பிரசன்னம் மாற்றினது போல, நம் அன்பு சகோதர, சகோதரிகளை துன்பப்படுத்துகிற மக்கள் இயேசுவை கண்டு மனந்திரும்பும்படி அதிக ஊக்கமாய் ஜெபிப்போம். கர்த்தர் தாமே உங்களோடு இருப்பாராக!




## இரத்தப் புற்றுநோய் நீங்கியது!



என் அக்கா மகள் பெயர் ஜாயிஸ் மேரி. அவள் இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு 4th stage-ல் இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். அதுவரை அவளுக்கு இந்த நோய் இருப்பது தெரியாமல் இருந்தது. உடனே அதற்கான சிகிச்சையும் அளித்தார்கள். அந்த நேரத்தில் மகளுடைய சுகத்திற்காக ஜெபிக்கும்படி நான் அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதியிருந்தேன். **Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தொலைபேசி மூலம் மகளுக்காக ஜெபித்தார்கள். இயேசு கிறிஸ்துவின் கல்வாரி இரத்தத்தினாலும், சகோதரனுடைய ஜெபத்தினாலும் மகள் புற்று நோயிலிருந்து விடுதலையாகி தற்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறாள். அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.** என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.

**திருமதி. ஜெரோம் ஸ்டான்லி, கேரளா.**

## குடும்பத்தில் சமாதானம் உண்டானது! தேர்வில் வெற்றி பெற்றேன்!



என் கணவர் வெளி நாட்டில் வேலை செய்து வருகிறார். உறவினர்களால் எங்களுக்குள் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்டு, விவாகரத்து செய்யும் நிலைக்கு வந்து விட்டோம். வெளிநாட்டில் நர்சிங் வேலைக்கு செல்வதற்காக இரண்டு முறை தேர்வு எழுதினேன். இரண்டுமுறையும் தோல்வி அடைந்து விட்டேன். இதனால் மனமுடைந்து ஒருவித விரக்தியுடன் வாழ்ந்து வந்தேன்.

அந்த நேரத்தில் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். கடைசி வரிசையில் அமர்ந்து கதறி அழுது ஜெபித்துக்கொண்டிருந்தேன். ஜெப வேளையில் Dr. ஜேன் ஜாஷ்வா அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து, என் பிரச்சனைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக சொல்லி தீர்க்கதரிசனத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள்.

**இரண்டு நாட்களுக்குப் பிறகு திடீரென என் கணவர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்து என்னுடன் அன்பாக பேசினார். தேர்வு எழுதுவதற்காக அழைத்து செல்ல வந்தேன்**

என சொன்னார். எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. அதன்பின் வேலைக்காக மூன்றாவது முறை எழுதிய தேர்வில் நான் வெற்றி பெற்றேன். இந்த இரண்டு அற்புதங்களை செய்து என் வாழ்வில் சமாதானத்தை கட்டளையிட்ட கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

திருமதி. ஜெமீமா, அரியலூர்.

## சத்துருவின் கிரியைகளிலிருந்து விடுதலை! குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது!



பல வருடங்களுக்கு முன் நாங்கள் சத்துருவின் போராட்டத்தினால் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தோம். அந்த நாட்களில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் நூற்றாண்டு மண்டபத்தில் கூட்டம் நடத்தினார்கள். நான் பாரத்துடன் கலந்துக்கொண்டேன். ஜெப வேளையில் பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலையாகி, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். என் கணவர் தேவகிருபையால் இரட்சிக்கப்பட்டார். குடும்பம் ஆசீர்வாதமாக இருக்கிறது. பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் இருக்கிறார்கள். இத்தனை நன்மைகளை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

திருமதி. ஜெஸி, குன்னத்தூர்.

## தேர்வில் வெற்றி!



என் மகள் பல் மருத்துவருக்கான முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தப் பொழுது படிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது என சொன்னாள். நான் திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொல்லி மகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா ஜெபித்து விட்டு மகள் நன்றாக படிப்பாள் என சொல்லி அனுப்பினார்கள். அதன்பின் மகள் எழுதிய தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கிறாள். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

திருமதி. ஜோதி. பாளையங்கோட்டை.

## இயேசுவின் ஒளியை கண்டேன்!



நான் இயேசுவை அறிந்த நாள் முதல் அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெறும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்களுக்கு

வந்துக்கொண்டிருக்கிறேன். சமீப காலத்தில் டெலிவரன்ஸ் சர்ச்சில் நடைபெறுகிற ஞாயிறு ஆராதனைக்கும் வந்து கலந்துக்கொண்டேன். **Rev. Dr. A. ஜாஷ்வா, Dr. ஜேன் ஜாஷ்வா அவர்கள் இருவரின் செய்தியும் என்னை மிகவும் கவர்ந்தது.** ஆகவே டெலிவரன்ஸ் சர்ச்சுக்கு அவ்வப்போது வர ஆரம்பித்தேன்.

Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை நேரில் பார்த்து பேச வேண்டும் என அதிகமாக விரும்பினேன். இதற்கிடையில் ஒரு நாள் பயங்கரமான விபத்து எனக்கு நேரிட்டு, என் கால் எலும்பு முறிந்துவிட்டது. சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எனினும் காலை அசைக்க முடியாமல் மிகவும் வேதனைப்பட்டேன். குடும்பத்தினர் உதவியுடன் டெலிவரன்ஸ் சர்ச்-க்கு வந்திருந்தேன். ஆராதனை முடிந்து வெளியே நின்று கொண்டிருந்தபொழுது சகோதரர் ஆனந்த ஸ்திரா அவர்கள் அலுவலக அறையிலிருந்து வெளியே வந்து, என்னை கடந்து சென்றுக் கொண்டிருந்தார்கள். என்னுடன் ஒன்றும் பேசவில்லை. **நான் அவர் முகத்தில் தேவ ஒளி வீசுவதை கண்டேன். அந்த ஒளி என் மேல் பட்ட உடனே என் கால் வேதனை நீங்கியது. நான் நன்றாக நடக்க ஆரம்பித்தேன். இன்று வரை எந்தவிதமான வலி, வேதனை எனக்கில்லை. சுகம் கொடுத்த தேவனை துதிக்கின்றேன்.**

கடந்த செப்டம்பர் மாதம் திண்டுக்கல்லில் சகோதரரின் கூட்டங்கள் நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நான் செய்து, ஆராதனை நடத்தவும் என் தேவன் கிருபை செய்தார். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்து கின்றேன்.

**-திரு. தினகரன், திண்டுக்கல்**

## வரவேண்டிய பணம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்தது!



நான் நீதித்துறையில் கடந்த 25 ஆண்டுகள் வேலை செய்து வந்தேன். 2010ம் ஆண்டில் எனக்கு வரவேண்டிய Selection grade increment வராமல் தடையாக இருந்தது. 2025-ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். ஆனாலும் அந்த பணம் எனக்கு கிடைக்கவில்லை. 15 ஆண்டுகள் கடந்து விட்டதால் அந்த பணம் கிடைக்க வாய்ப்பில்லை என அலுவலகத்தில் கூறிவிட்டார்கள். இதற்காக ஜெபிக்கும்படி அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் அனுப்பியிருந்தேன். பதில் கடிதத்தில் 'உங்கள் காரியம் வெற்றியாக முடியும்' என ஐயா பதில் எழுதியிருந்தார்கள். நானும் பொருத்தனையோடு ஜெபித்தேன். **கர்த்தர் தடைகளை நீக்கி வரவேண்டிய பணம் அதிசயமாக எனக்கு கிடைப்பதற்கு உதவி செய்தார். என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன். தேவனுக்கே மகிமை.**

-Sis. **மாதேஷ்வரி, ஈரோடு.**

**Tamil WhatsApp No: +91 95004 87059**

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள். ஆவிக்குரிய தேவ செய்தி.
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

எந்தவிதமான வேறுபாடுமின்றி அனைவரும்
இவ்வாராதனையில் பங்கு பெறலாம்.



# வங்கிக் கணக்குகளின் விபரம்

MINISTRY OF JESUS
A/C NO. 10848474869

ANBARIN OOZHIYAM
A/C NO. 10848559426

DR. ANANDA STIRA
A/C NO. 10848469699



**IFS Code: SBIN 0000930**

**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற
எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)



# S. J. SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார். (சங்.68:5)

எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். (ரோமர் 2:10)

நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். (கலாத்தியர் 6:9)

அன்பான தேவ பிள்ளைகளே!

உங்கள் அன்பு சகோதரனும், சகோதரியும் தங்களது திருமண வாழ்வை ஆரம்பித்ததிலிருந்தே திக்கற்ற பிள்ளைகளுக்கும், பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கும், மனிதர்களால் ஒதுக்கப்பட்ட பிள்ளைகளுக்கும், வாழ்வதற்கே வழி இல்லாதவர்களுக்கும் தங்கள் வீட்டில் இடம் கொடுத்து, அவர்களை அருமையாக போஷித்து, அவர்களை படிக்க வைத்து, அதில் சிலருக்கு திருமணமும் செய்து வைத்தார்கள். 9 பிள்ளைகளுடன் இந்த நற்பணியானது ஆரம்பிக்கப்பட்டது.

இன்று நமது S. J. SAVES TRUST அறக்கட்டளையின் மூலம் பின் தங்கிய கிராமங்களில் உள்ள 500 பிள்ளைகளின் நல்வாழ்விற்காக பல உதவிகளை செய்து வருகிறோம். இவர்கள் அனைவரும் நன்கு படிப்பதற்காக நல்ல ஆசிரியர்களைக் கொண்டு மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகிறோம். அத்துடன் ஒவ்வொரு நாளும் மாலை சிற்றுண்டி அளித்து, இரவு சாப்பாடு கொடுத்து, வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்து வந்துள்ளோம்.











கடந்த மாதம் சேலம் மாவட்டம் சக்தி நகர், மின்னாங்காடு, நொச்சிபட்டி, A.N.மங்களம், காட்டுவேப்பிலைபட்டி போன்ற, மனிதரால் எண்ணப்படாமல் இருக்கிற கிராமங்களில் 300 பிள்ளைகளுக்கும் அதிகமானவர்களுக்கு ஸ்கூல் பேக், டிபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில், ஜாமின்ட்ரி பாக்ஸ், பேனா, பென்சில், சோப், பேஸ்ட், சீப்பு மற்றும் பல்வேறு உபகரணங்களை கொடுத்துள்ளோம். உடல் நலத்திற்கு தேவையான மருந்துகள் மற்றும் இனிப்பு, காரம், பிரியாணி கொடுத்து மகிழ்ந்தோம். பிரதிபலன் கருதாமல் கர்த்தர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்தது போல நாமும் இந்த ஏழை சிறார்களிடம் பரிசுத்தமான அன்பை செயல்களின் மூலம் காட்டுவோமாக!

**இதற்காக எங்களோடுகூட இந்த ஏழை மக்களுக்காக ஜெபம் செய்து, நன்கொடைகள் மூலம் உதவி செய்த அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். கர்த்தர் உங்கள் செய்கைக்குத்தக்க பலனை நிச்சயமாய் அருளி ஆசீர்வதிப்பார். தொடர்ந்து இப்பணியில் முன்னேறுவோம்.**

*இந்த ஏழை பிள்ளைகளுக்கு மிக அவசியமாக ஒரு பள்ளிக்கூடம் தேவை. அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நம்மை நம்பி இருக்கிற நூற்றுக்கணக்கான விதவைகளுக்கும் நாம் உதவி செய்ய வேண்டியுள்ளது. இந்த மழை மற்றும் குளிர் காலத்தில் அவர்களுக்குத் தேவையான பாய், படுக்கைவிரிப்பு, போர்வை மற்றும் புடவைகள் நாம் வாங்கித்தர வேண்டும். ஒவ்வொருவருக்கும் சுமார் 650 ரூபாய் செலவாகும். இதை மனதில் வைத்து திக்கற்றோரை தாங்குங்கள். இயேசுவின் கட்டளையின்படி நம்மை போல பிறரையும் நேசிப்போம்.*

**S. J. Saves Trust – ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

Bank A/C.Name : SJ SAVES TRUST
Account No : 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy.
IFSC Code : TMBL 0000019
A/C Type: Current

# S. J. S. T. RURAL HOSPITAL

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சுமார் எட்டு வருடங்களாக நம் S.J.S.T. கிராமப்புற மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரு MD மற்றும் மூன்று MBBS மருத்துவர்களும் பணிபுரிகின்றார்கள். அத்துடன் மூன்று Nurses, X-Ray Technician வேலை செய்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

**மிக அவசரமாக ஒரு பெண் மருத்துவர் MBBS மற்றும் மூன்று வருடம் நர்சிங் கோர்ஸ் முடித்த ஒரு கிறிஸ்தவ நர்ஸ் தேவை.** இதற்காக ஊக்கமாக ஜெபியுங்கள். உங்கள் குடும்பங்களில் யாராவது இருப்பார்கள் என்றால் உடனே விண்ணப்பிக்கவும். வெளியூரிலிருந்து வருகின்றவர்களுக்கு தங்குமிடம் வசதி உண்டு.

ஒவ்வொரு மாதமும் இந்த அறக்கட்டளையின் மூலம் செயல்படும் மருத்துவ மனைக்கு சுமார் 2 லட்சம் முதல் 3 லட்சம் வரை மருந்துக்கு என செலவாகிறது. அத்துடன் சம்பளம், மின்சார கட்டணம், பராமரிப்பு செலவுகள் இவை எல்லாம் சேர்த்து சுமார் **6 லட்சம் (Rs.6,00,000)** வரை தேவைப்படுகிறது. தயவுசெய்து ஊக்கமாக ஜெபியுங்கள். யோபு தன் சிநேகிதனுக்காக ஜெபித்தபொழுது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். அதுபோல நாமும் நம்மிடம் வருகின்ற வியாதியஸ்தர்களை நினைப்போம். இந்த மருத்துவபணிக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க் கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! **மத்தேயு 25:33-40**

S. J. S. T. **மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய**

Bank A/C.Name : SJ SAVES TRUST
Account No : 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy Main Brach
IFSC Code : SBIN 0000930
A/C Type: Current

***Telugu WhatsApp No: +91 91770 87860***

# அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்!
# (மத்தேயு 9:36-38)












# உலக செய்திகள்



நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் சூரியனில் ஒரு பெரிய பட்டாம்பூச்சி வடிவ கொரோனல் துளையை புகைப்படம் எடுத்துள்ளது. நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகத்தின்படி சூரியனின் வளிமண்டலத்தில் 5.00.000 கி.மீ. அகலமுள்ள ஒரு பட்டாம்பூச்சி வடிவ துளை தோன்றியுள்ளது. இந்த உருவாகம் செப்டம்பர் 11 அன்று புகைப்படம் எடுக்கப்பட்டது. இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு அதன் அசாதாரண வடிவம் மற்றும் விண்வெளி வானிலையை பாதிக்கும் திறன் ஆகியவற்றால் கவனத்தை ஈர்த்துள்ளது. சூரியனின் வெளிப்புற அடுக்குகளில் இந்ததிறப்பு கொரோனல் துளை என அழைக்கப்படுகிறது. இப்பகுதிகளில், சூரியனின் காந்தப்புலங்கள் திறந்து, சூரியக் காற்று விண்வெளியில் தப்பிச்செல்ல அனுமதிக்கிறது. அந்த துளையிலிருந்து வரும் சூரியக் காற்று செப்டம்பர் 14ம் தேதிக்குள் பூமியை அடையும். இது புவி காந்த புயல்களை ஏற்படுத்தக் கூடும் என நாசா தெரிவித்துள்ளது.



உத்தரகாண்ட் மாநிலத்தில் செப்டம்பர் 15ம் தேதி இரவு முழுவதும் பெய்த கனமழையால் சாலைகள், வீடுகள் சேதம் அடைந்தன. டேராடூனில் 16ம் தேதி அதிகாலை ஒரு பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதில் 5 பேர் பலியாகினர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் பேரிடர் மீட்பு படை நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்த நிலையில் டேராடூன் மற்றும் சுற்றுப் பகுதிகளில் வெள்ளம், நிலச்சரிவு ஏற்பட்டு பலியானோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 13 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல் மந்திரி புஷ்கர் சிங் தாமி பார்வையிட்டு நிலவரத்தை ஆய்வு செய்தார்.

இந்தியாவின் 15வது துணை ஜனாதிபதி தேர்தல் கடந்த 9ந் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதில் 452 வாக்குகள் பெற்று தேசிய ஜனநாய கூட்டணி வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார்.

**...நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். ஏசாயா25:4**

**வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். ஏசாயா 59:19 (மாற்கு 4:37-39) (ஏசாயா 32:2)**

வானத்தையும் பூமியையும் உருவாக்கின சர்வ வல்லமையுள்ள தேவனே! உம்மை ஸ்தோத்தரிக்கிறேன், துதிக்கிறேன். நீர் ஒருவரே தேவன். கடந்த நாட்களில் நிலச்சரிவு, மழை, பெருவெள்ளம் மற்றும் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டு, தங்கள் வீடுகளையும், குடும்பத்தினரையும், உறவினர்களையும் இழந்து பயத்துடன் கலங்கியிருக்கிற ஒவ்வொரு சகோதர, சகோதரிகளுக்காக ஜெபிக்கிறேன். இயேசுவாகிய நீர் உலகில் மனிதனாக இருந்தபொழுது திடீரென வந்த பயங்கரமான கடல் சீற்றத்தையும், பெருங்காற்றையும் அதட்டி சீஷர்களின் பயத்தை போக்கினீர். அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் பயத்தை, கலக்கத்தை நீக்கி அவர்களை தைரியப்படுத்தும்.

வான மண்டலத்திலுள்ள நட்சத்திரங்களை எல்லாம் பெயர் சொல்லி அழைத்து, அவைகளை அருமையாக நடத்துகிறவரே! இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் அநேக விமான விபத்துக்கள், ரயில் விபத்துக்கள் மற்றும் பல்வேறு வாகன விபத்துகளினாலும் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜெபிக்கிறேன். அன்பின் கர்த்தாவே, **(மாற்கு 4:36-41)** அந்த மக்கள் மேல் நீர் இரக்கம் வையும். அவர்களுக்கு தயவாக இரங்கும்! அருமையானவர்களை இழக்கக் கொடுத்த ஒவ்வொருவருக்கும் உலகம் தரக்கூடாத சமாதானத்தை அருளும்.

**சங்கீதம் 91**-ன்படி உம்மை அடைக்கலமாய் கொண்ட மக்கள் அனைவரையும் அற்புதமாக காப்பாற்றும். **சங்கீதம் 91:15,16**-ன்படி ஆபத்தில் நீர் தாமே அவர்களோடு கூட இருந்து, அனைத்து இக்கட்டுகளுக்கும் விலக்கிக்காத்தருளும். அவர்களுடைய துன்ப, துயரத்தில் உமது பிரசன்னம் அவர்களை ஆறுதல்படுத்தி, திடநம்பிக்கையை தரும்படி ஜெபிக்கிறேன். மக்களும் தங்கள் அறியாமையிலிருந்து விடுபட்டு, சகலத்தையும் ஆண்டு நடத்துகிற மகா உன்னதமான தேவனாகிய உம்மை நோக்கி கூப்பிட செய்யும். உம்மை நோக்கி கூப்பிடும்பொழுது நிச்சயமாக நீர் அவர்கள் தவறுகளையும், குற்றங்களையும், அறியாமையையும், உம்மைவிட்டு பின் வாங்கினதையும் மன்னித்து, இழந்த எல்லாவற்றையும் மீண்டும் இரண்டு மடங்காக பெற்றுக்கொள்ளச் செய்வீர் என்பதை அறிந்துக்கொள்ளட்டும். உம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் பலத்த பாதுகாப்பை தந்தருளும். அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்தருளும். எல்லாவற்றுக்கும் மேலாக அந்த மக்கள் குமாரனாகிய இயேசு தரும் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள செய்யும். நீர் மனுஷரின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தீர், மரணத்தின் மீது வெற்றி சிறந்தீர். எனவே நொறுங்குண்ட அந்த உள்ளங்களை ஆறுதல்படுத்தி அவர்கள் சந்தோஷப்படும்படி அற்புத அடையாளங்களை செய்யும்.

அன்பின் கர்த்தாவே! இனிவரும் நாட்களில் எந்தவிதமான இயற்கை சீற்றங்களும் வராதபடி நீர் தொடர்ந்து பாதுகாத்தருளும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்கின்றோம். பரம தந்தையே! ஆமென்.

## திருச்சியில் அன்பரின் ஊழிய பங்காளர்களுக்கான விசேஷித்த கூடுகை!

அக்டோபர்
**20**
[திங்கள் கிழமை] [அரசு விடுமுறை]

நேரம்
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை

தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18**

கூட்ட முடிவில் பங்காளர்களை தனித்தனியாக சந்தித்து விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும். பங்காளர்களுக்கான மதிய உணவு ஏற்பாடு முன்னிட்டு உங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துக்கொள்ளுங்கள்.

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922

திருச்சியில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

அக்டோபர்
**25**
சனிக்கிழமை

நேரம்
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை



Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்

**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18**

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922
(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

# வேலையிலிருந்த நெருக்கடியை மாற்றி சம்பள உயர்வை தந்த கர்த்தர்!



என் பெயர் கிறிஸ்டி சந்தானம். நாங்கள் டெலிவரன்ஸ் திருச்சபையின் அங்கத்தினராக இருந்து வருகிறோம். சென்னையில் உள்ள ஒரு நிறுவனத்தில் நான் வேலை பார்த்து வருகிறேன். கடந்த ஆறுமாத காலமாக எனக்கும், எனக்கு மேல் உள்ள அதிகாரிக்கும் இடையே ஏராளமான பிரச்சனைகள் வந்துக் கொண்டே இருந்தது. முடிவில் அவர் என்னை வேலையைவிட்டு போகும்படி சொல்லிவிட்டார். அதனால் நாம் மனவருத்தத்துடன் இருந்தேன். மனதிற்குள் ஜெபித்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது அந்த அதிகாரி என்னிடம், "நீங்கள் வேலையை விட்டு போவதற்கு முன் உயர் அதிகாரியை (Vice president) பார்த்து, அவரிடம் சொல்லிவிட்டு செல்லும்படி" கூறினார். நானும் அதன்படி அவரை பார்க்க சென்றேன். அப்பொழுது அவருடன் சில காரியங்களை குறித்து பேசிக் கொண்டிருந்தப்பொழுது, **நான் செய்த பல முக்கியமான வேலைகளை குறித்து அவர் அறியாதிருந்தார். நான்தான் அந்த வேலைகளை எல்லாம் முடித்துக் கொடுத்தேன் என அறிந்தவுடன், "நீங்கள் வேலையைவிட்டு போக வேண்டாம். தொடர்ந்து வேலையில் இருங்கள், உங்களுக்கு சம்பள உயர்வும் தருகிறேன்" என சொன்னார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கர்த்தர் தாமே உயர் அதிகாரியின் கண்களில் எனக்கு தயை கிடைக்கும்படி அற்புதம் செய்தார்.**

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நிலம் வாங்கவேண்டும் என மிகுந்த ஆசைப்பட்டேன். கையில் பணம் இல்லை. அந்த நேரத்தில் வேலையும் இல்லை. என்னுடைய மனைவியின் நகைகளை அடகு வைத்துதான் அந்த நிலத்தை வாங்கினேன். **தற்பொழுது கர்த்தரின் கிருபையால் ஒவ்வொரு நகையாக திருப்பி, கடைசியாக போன வாரம் முழு நகைகளையும் திருப்பி, கடன்களை எல்லாம் முடிப்பதற்கும் கர்த்தர் உதவி செய்தார்.** இந்த இரண்டு அற்புதங்களை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக ஜெபிக்கிற பாஸ்டர் குடும்பத்தினருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். -

**திரு. கிறிஸ்டி சந்தானம், அதவத்தூர், திருச்சி.**



# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம் மற்றும் விடுதலையின் ஜெபம்

அக்டோபர் **01** புதன் கிழமை

## நாகர்கோவிலில்

SGS டிலைட் ஹால்
(பிரியம் மண்டபம்)
பெதஸ்தா காம்ப்ளக்ஸ்
அருகில்
WCC ரோடு.
நாகர்கோவில்.

அக்டோபர் **02** வியாழக்கிழமை

## மதுரையில்

சிவபாக்யா மஹால் AC
ஆரப்பாளையம் பேருந்து
நிலையம்அருகில்.
ஞானஒளிவுபுரம்.
மதுரை.



அக்டோபர் **11** சனிக்கிழமை

## சென்னையில்

BKN Skidmore
Hall A/C
ரித்தர்டன் ரோடு.
வேப்பேரி.
சென்னை

அக்டோபர் **18** சனிக்கிழமை

## வேலூரில்

கிறிஸ்து லூத்தரன்
திருச்சபை
I. E. L. C 30.
புதிய பைபாஸ் சாலை,
வேலூர்-4

**காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை**

தேவ செய்தியாளர்கள்: Dr. ஆனந்த ஸ்திரா & Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு: 9488845627 , 0431-2741922